2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம், பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம், ஓட்டுநர் பயிற்சித் தளம் அமைப்பதற்கு என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.34,73,42,000/- நிதியினை வழங்கி அவையனைத்தும் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு ஆணைகளை வழங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது; 55 இலட்சம் ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இந்தக் கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 368, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

368—

குளிர்பதனக் கிடங்கு

***5513—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி மற்றும் பெண்ணாகரத்தில் வேளாண் விளைபொருட்களுக்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஐந்து இல்லாமல் அகிலம் இல்லை; ஐந்தை அறியாதவனுக்கு ஆனந்தம் இல்லை என்ற வகையில் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என பஞ்ச பூதங்கள் இல்லாமல் இந்த உலகம் இல்லை. அந்த பஞ்ச பூதங்களை அறியாதவனுக்கு ஆனந்தமும் இல்லை. அந்த ஐந்து பூதங்களிலே நிலமே பிரதானம். அந்த நிலத்தைப் பிரதானமாகக் கொண்டதுதான் வேளாண்மை. அப்படிப்பட்ட வேளாண்மைத் துறையில், பெண்ணாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்றிடும் தகுதியும், கடமையுணர்வும் கொண்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். பெண்ணாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் மூலமாக ரூ.31.80 இலட்சம் மதிப்பீட்டில், 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்று, கடந்த 27-6-2014 அன்று திறக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கமான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே விவசாயப் பொருட்களுக்கான கிடங்கு இருக்கிறது. ஆனால், குளிர்பதனக் கிடங்கு இல்லை. ஆகவே, பொருட்களைக் கெடாமல் பாதுகாக்கின்றவகையிலே, வேளாண்மை விளைபொருட்களுக்கான குளிர்பதனக் கிடங்கு வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாக இருக்கிறது. அதை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு*

2014 ஆகஸ்ட் 7]

உறுப்பினருடைய கோரிக்கையின்படி, பெண்ணாகரத்தில் குளிர்பதனக் கிடங்கு ஏற்கெனவே கட்டப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் திறக்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளபடி, தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தருமபுரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டில், புளிக்கென ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. பணிகள் முடிவுற்றபின், விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படவுள்ளதால், விவசாயிகள் பெண்ணாகரம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி பகுதியில்தான் தருமபுரி மாவட்டத்திலேயே மிகவும் தரமான புளி விளைச்சல் ஏராளமாக இருக்கிறது. ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினைத் தருகின்ற வகையில் உள்ள அந்தத் தொழிலில் அங்கேயுள்ள மக்கள் ஈடுபட்டு வருகிறார்கள். எனவே, அங்கு விளைகின்ற புளியினைப் பாதுகாத்திட, பாப்பாரப்பட்டியில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அரூர், பெண்ணாகரம், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தவிர, தருமபுரி பகுதியில் மொத்தம் 8 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 குளிர்பதனக் கிடங்குகள் தனியாரால் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எனவே, இப்பகுதி விவசாயிகள் உபரியாக உள்ள வேளாண் விளைபொருட்களை மேலே கண்ட அரசு மற்றும் தனியார் குளிர்பதனக் கிடங்குகளில் வைத்து, சந்தையில் கூடுதலான விலைக்கு விற்பதற்கு ஏதுவான சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள், பாப்பாரப்பட்டியிலே ஒரு கிடங்கு அமைக்கப்படுமா என்று கோரியிருக்கிறார்கள். மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, துறையின் மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, பாப்பாரப்பட்டியிலே ஒரு கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 369, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

369—

கால்நடை மருத்துவமனை

***18564—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், திருவாப்பாடியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட